NUS National University of Singapore

Source: *Tamil Murasu*, p2
Date: 13 August 2016

நகர மையத்தில் வீவக வாழ்க்கை; அரசு யோசிக்கிறது

'கிரேட்டர் சதர்ன் வாட்டர்ஃபிராண்ட்' போன்ற நகரின் மையத்தில் இடம்பெறக்கூடிய கட்டுமானத் திட்டங்களில் வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளை இடம்பெறச் செய்யும் சாத்தியம் பற்றி அரசாங்கம் யோசித்து வருவதாக தேசிய வளர்ச்சி அமைச்சர் லாரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் கெண்ட் ரிட்ஜ் அமைச்சர்நிலை கருத்தரங்கில் திரு வோங் நேற்று முன் தினம் பேசினார். அப்படி கட்டப்படும் வீடு அதிக மானியத் துடன் கூடிய ஒன்றாக இருக்கும். பொதுச் சந்தையில் அதன் மதிப்பு மிகவும் அதிகமாக இருக்கும். இத்தகைய ஒரு வீடு அதிர்ஷ்டவசமாக ஒருவருக்கு கிடைக்கும் என்ப தால் இதில் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதுதான் முக்கிய அக்கறைக்கு உரிய அம்சமாக இருக்கிறது என்றார் அவர்.

சீட்டுக்குலுக்கு மூலம் ஒரு வீட்டைப் பெறுபவர் அந்த வீட்டின் மூலம் பெரும் ஆதாயத்தை அடைவார். நகர மையத்தில் அமைந்திருக்கும் அந்த வீட்டைப் பெற முடியாத ஒருவருடன் ஒப்பிடும்போது இது நியாயமற்றதாகவே இருக்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பாசிர் பாஞ்சாங், தஞ்சோங் பகார் ஆகிய துறைமுகங்கள் 2027ல் துவாஸுக்கு இடம் மாறுகின்றன. அதனால் கிடைக்கக்கூடிய நிலத்தில் 'கிரேட்டர் சதர்ன் வாட்டர்ஃ பிராண்ட்' திட்டம் உருவாகிறது.

அங்கு வீவக கட்டும் வீட்டுக்கு வேறுபட்ட நிபந்தனை களையும் குத்தகைக் காலத்தையும் அமல்படுத்தலாம் என்பது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வழி என்று தெரிவித்த அமைச்சர், பல்வேறு அம்சங்களைப் பற்றி அரசாங்கம் சிந்தித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.